FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213097

1. District : CHENNAI மாவட்டம் | PS: V&AC, CHENNAI-II காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 01/AC/2025/CC.II முத.அ. எண் | Date: 18.07.202 நாள்

2. (i) Act சட்டம்: CITY – II | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்: –
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் : 10.07.2025 | Date to நாள் வரை : 17.07.2025
   Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் : at about 16.00 Hrs | Time to நேரம் வரை : at about 14.45 Hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.07.2025 | Time நேரம் : 12.20 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.07.2025 | Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — written/Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் o/o. Joint Director of Drugs Control. at about 12 KM, North East.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி Drugs Administrative Building, DMS complex, Teynampet, Chennai – 600086.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Saravanan | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. Sivalingam
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1974 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Agri Business | (g) Address : முகவரி No.3, Kavili Nagar, Seruvangi, Gudiyatham, Vellore District – 632601.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Dr. P.V. Karthikeyan, Joint Director of Drugs Control, Director-in-charge, Drug Administrative Building, DMS Complex, Teynampet, Chennai – 600086.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   By the Complainant.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)


—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet is enclosed.



13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M.VISVAKHUMAR, Rank ..... Inspector to take up the investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18/7/2025

18.07.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 18.07.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M.VISVAKHUMAR
Rank: நிலை INSPECTOR OF POLICE,
V&AC, CC.II, Chennai.

.... In Continuation to column no.12 of FIR in Chennai, V&AC, Chennai City-II Cr.No.01/AC/2025/CC-II.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-2-ன் காவல் ஆய்வாளர் M.விஸ்வகுமார் ஆகிய நான் இன்று 18.07.2025-ந்தேதி பகல் 12.30 மணிக்கு அலுவலகத்தில் பணியிலிருந்தபோது செல்வி.ஆ.பிரியதர்ஷினி, காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-II, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை அவர்கள் வேலூர் மாவட்டம், குடியாத்தம், செருவங்கி, காவேரி நகரைச் சார்ந்த திரு.சி.சரவணன் என்பவர் அலுவலகம் வந்து கணினி மூலம் தட்டச்சு செய்து கொண்டு வந்து அளித்த எழுத்துமூலமான புகாரினை 12.20 மணிக்கு பெற்று அதில் ஏற்பிசை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்த புகாரினை பெற்று, அதன் பேரில் மறைமுக விசாரணை செய்து உயர் அதிகாரிகளுக்கு மேற்படி புகாரின் உண்மை தன்மையை தெரிவித்து, அதன்படி உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி இன்று 18.07.2025-ந் தேதி 13.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அவர் அளித்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- விடுநர் சி.சரவணன், த/பெ.இரா.சிவலிங்கம், 3, காவிரி நகர், செருவங்கி, குடியாத்தம் - 632601, வேலூர் மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை. அம்மா, வணக்கம், என் இணையர் சு.சத்தியப்பூங்குழலி அவர்கள் Our Green India என்ற பெயரில் ஹெர்பல் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனத்தை குடியாத்தத்தில் ஆரம்பித்துள்ளார். அந்த நிறுவனத்திற்கு Cosmetics Manufacturing Sales உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம் தருவதற்காக சென்னையில் உள்ள மருந்துக்கட்டுப்பாடு இயக்குநரகத்திற்கு 10.07.2025 அன்று பிற்பகல் 4 மணியளவில் சென்று விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.20,000/-த்தை இணையவழி மூலம் செலுத்திய பிறகு அலுவலகத்தில் தபால் பெறும் பிரிவிலிருந்த திரு.விஜயகுமார் என்பவரிடம் விண்ணப்பத்தை கொடுத்தேன். அதற்கு திரு.விஜயகுமார் என்பவர் எனக்கு ரூ.500/- கொடுங்கள், உங்கள் விண்ணப்பத்தில் இன்னும் ஸ்டாம்ப் ஒட்டி, தைத்து, உங்களை இயக்குநரிடம் அழைத்துப்போகிறேன் என்று சொன்னார். அவரின் UPI கணக்கு எண்.9566207192 என்ற எண்ணைச் சொல்லி அந்த எண்ணிற்கு பணத்தை அனுப்ப சொன்னார். திரு.விஜயகுமார் கொடுத்த எண்ணிற்கு ரூ.500/- Paytm மூலம் அனுப்பினேன். அதன்பிறகு அவர், என்னை இயக்குநர், மருந்துக்கட்டுப்பாடு என்ற பெயர் பலகை வைக்கப்பட்டிருந்த அறைக்குள் அழைத்துச் சென்றார். அந்த அறையில் இருக்கையில் இருந்த திரு.P.U.கார்த்திகேயன் (இயக்குநர் பொறுப்பு) அவர்களை சந்தித்து என்னுடைய விண்ணப்பத்தை கொடுத்தேன். (நான் சந்தித்த அதிகாரியின் முழு பெயரை திரு.விஜயகுமாரிடம் கேட்டும், இணையத்தில்

பார்த்தும் உறுதி செய்துகொண்டேன்). திரு.கார்த்திக்கேயன் அவர்கள் என் விண்ணப்பத்தை வாங்கிக்கொண்டு உங்களுக்கு licence வேண்டுமென்றால் Formalities செய்ய வேண்டியிருக்குமே என்றார். நான் அதன் பொருளைப் புரிந்து கொள்வதற்குள் அவருக்குத் தொலைபேசி அழைப்பு வரவே, நான் அறையை விட்டு வெளியேற நினைத்தேன். அப்போது அவர் அவரின் தொலைபேசி எண்.9444142488 என்னிடம் சொல்லி, அடுத்த புதன்கிழமை அவரை சந்திக்க வரலாம் என்றார். நான் 15.07.2025 அன்று திரு.கார்த்திகேயன் அவர்களிடம், அவர் கொடுத்த தொலைபேசி எண்ணில் பேசினேன். 16.07.2025ம் தேதி (புதன்கிழமை) பிற்பகல் வாங்க என்றார். நான் 16.07.2025 அன்று சென்னைக்கு வந்து பிற்பகல் சுமார் 03.30 மணிக்கு அவருடைய அலுவலகம் சென்றேன். அவரை சந்திப்பதற்கு முன், அவர் சொன்ன Formalities என்ற வார்த்தை நினைவுக்கு வரவே, என் செல்போனில் வீடியோ on செய்துவிட்டு அவர் அறைக்குள் நுழைந்தேன். அவரிடம் Our Green India-விலிருந்து விண்ணப்பம் கொடுத்ததை கூறியவுடன், Queries ஏதோ போட்டுள்ளார்களே என்று கூறினார். நான் அதை சரிசெய்து கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னவுடன், அலுவலகத்திலிருந்த ஒருவரை அழைத்து என் பைலை வாங்கி பார்த்துவிட்டு Queries உள்ள பேப்பரை எடுத்து வருமாறு அவரை அனுப்பிவிட்டு Formalities கொண்டு வந்துட்டீங்களா, (ஒரு விரலைக் காண்பித்து) எல்லோரும் ஒருபா செய்வாங்க, என்று சொன்னார். நான் என்னிடம் எதுவும் சொல்லவில்லை சார் என்று கூறினேன். அதற்குள் அந்த அலுவலர் மீண்டும் அறைக்குள் வந்தவுடன் பேப்பரை வாங்கி பார்த்துவிட்டு INC Norms படி குறைபாடு உள்ளதாக தெரிவித்தார். நான் என்னுடைய தயாரிப்பில் கெமிக்கல்ஸ் எதுவுமில்லை என்று கூறினேன். அதற்கு அவர் நிறைய குறைகள் உள்ளன, வெளியே சௌந்தர்யா என்பவரை பார்க்குமாறு சொல்லி அனுப்பி வைத்தார். நான் வெளியே வந்து அவ்வலுவலகத்தில் பணிபுரியும் சௌந்தர்யா அவர்களை பார்த்த போது அவர் என் விண்ணப்பத்தில் குறைகள் இருப்பதாகவும், அவற்றைச் சரிசெய்ய வேண்டும் என்றும் சொன்னார். குறைபாடுகள் என்று அவர் எழுதி வைத்திருந்தவைகளைத் தரும்படிக் கேட்டேன். ஆனால் இல்லை நாங்களே இன்று உங்கள் வீட்டு முகவரிக்கு அஞ்சலில் அனுப்பிவிடுவோம் என்று சொன்னார். திரு.கார்த்திக்கேயன் அவர்கள் என்னிடம் கேட்பது லஞ்சப்பணம் என்று புரிந்துக்கொண்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால் ஆலந்தூரில் உள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திற்கு சென்று விசாரித்தேன். அங்கிருந்த காவலர் ஒருவர் ஒரு தொலைபேசி எண்ணை கொடுத்து DSP அவர்களை தொடர்பு கொள்ளுமாறு கூறினார். நான் அந்த எண்ணிற்கு அழைத்தேன். அந்த அழைப்பினை அவர்கள் எடுக்கவில்லை. அதனால் நான் என் இணையரிடம் கலந்து ஆலோசித்து முடிவெடுக்கலாம் என குடியாத்தத்திற்கு சென்றுவிட்டேன். என் இணையரிடம் கலந்து பேசினேன். 17.07.2025ம் தேதி

காலை சுமார் 06.45 மணிக்கு ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை DSP அவர்களை மீண்டும் செல்போனில் அழைத்து பேசினேன். அவர் என்னை நேரில் அலுவலகத்திற்கு வருமாறு கூறினார். அதன்பிறகு, என் விண்ணப்பத்தில் இருக்கும் குறைகளை சரிசெய்வதற்காக பகல் சுமார் 12.20 மணிக்கு நான் திரு.கார்த்திக்கேயன் அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு பேசினேன். அதற்கு திரு.கார்த்திக்கேயன், உங்கள் விண்ணப்பத்தில் நிறைய Queries உள்ளது, முதலில் ரூ.25,000/- நாளைக்கு கொண்டு வந்து கொடுத்துவிடுங்கள், குறைகளை நான் பார்த்துக்கொள்கிறேன். மீதியை அப்ரூவ் செய்த பிறகு கொடுத்துவிடவேண்டும், இல்லையென்றால் உங்கள் File Reject-ஆகிவிடும், நீங்கள் மீண்டும் முதலில் இருந்து அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கும், File return ஆகிக்கொண்டேயிருக்கும் என்று கூறினார். என் இணையர் சு.சத்தியப்பூங்குழலி அவர்களிடம் கலந்தாலோசித்த போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மூலம் நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறினார். 17.07.2025ம் தேதி மதியம் சுமார் 01.45 மணிக்கு மீண்டும் ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை DSP அவர்கள் போன் செய்திருந்ததை பார்த்துவிட்டு நான் மீண்டும் அவரை அழைத்த போது, என்னாச்சு என்று கேட்டார். நான் திரு.கார்த்திகேயன் அவர்கள் ரூ.25,000/- லஞ்சம் கேட்டதை கூறினேன். அதற்கு DSP அவர்கள் நீங்கள் பணத்தை தயார் செய்து கொண்டு புகாருடன் வருமாறு கூறினார். நான் மீண்டும் திரு.கார்த்திக்கேயன் அவர்களை சுமார் 2.45 மணிக்கு செல்போனில் தொடர்பு கொண்டு பேசிய போது அவர் பணத்துடன் நாளை வருமாறு கூறினார். எங்கள் நிறுவனத்திற்கு உரிமம் வழங்க ரூ.25,000/- லஞ்சம் கேட்ட திரு.P.U.கார்த்திக்கேயன், (இயக்குநர் பொறுப்பு), மருந்துக்கட்டுப்பாடு, அண்ணாசாலை, சென்னை அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இன்று 18.07.2025ம் தேதி தங்கள் அலுவலகம் வந்து புகார் கொடுக்கிறேன். தங்கள் உண்மையுள்ள, Sd (XXX) சி.சரவணன், 18.07.2025. Sir, Today, I received a written complaint along with copy of Government of Tamil Nadu E-Challan Remitter copy, Challan Number. 20250710025000, dt:10.07.2025 and San Disk Cruzer Blade USB 2.0 Flash Driver 8 GB - Pen Drive on 18.07.2025 at 12.30 hrs. Sd (XXX) M.Visvakhumar, 18.07.2025, Inspector of Police, CC-II, V&AC, Chennai-16. Sir, after due verification, a case was registered in V&AC, Chennai City-II Detachment in Crime No.01/AC/2025/CC-II U/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 18.07.2025 at 13.30 hrs. Sd (XXX) M.Visvakhumar, 18.07.2025, Inspector of Police, CC-II, V&AC, Chennai-16.

The original FIR along with written complaint submitted before the Hon'ble Principal Judge, City Civil Court, Chennai and other copies submitted to the officers concerned.

mvkkhumar
18.07.2025
Insp. CC-II,
V&AC.Ch.16